O.S. No: 77/2024
பெயர்: சிவக்குமார்
**வா.சா. 1**
04-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 3.35**

**குறுக்கு விசாரணை**

எனக்கு 23.11.2023ல் அகல்யா என்பவருடன் திருமணம் ஆனது. இந்த வழக்கில் 2ம் வாதி திருநாவுகக்கரசு என் அப்பா. 3ம் வாதி தங்கம் என் அம்மா. 4வது வாதி அழகி என் 3வது அக்காவின் கணவர். நான் ஓட்டல் மேனேஜ்மெண்ட் முடித்து செப் ஆக வேலை பார்க்கிறேன். தற்போது நான் பணியில் இல்லை. இதற்கு முன்பு நான்கு வருடங்கள் அமெரிக்காவில் வேலை பார்த்தேன். நான் இந்தியாவிற்கு 10.02.2023ல் வந்தேன். 2ம் பிரதிவாதி சௌமியாவை எனக்கு திருமணம் செய்து வைப்பதற்காக பார்த்திருப்பதாக என் குடும்பத்தார்கள் சொன்னார்கள் என்றால் ஆமாம். என் அப்பா புரோக்கர் கலைச்செல்வன் மூலமாக இந்த பெண் அறிமுகம் கிடைத்தது. என்தரப்பில் என் அம்மா அப்பாவும், 2ம் பிரதிவாதி தரப்பில் அவர் அம்மா முதல் பிரதிவாதியும் பேசினார்கள். புரோக்கர் கலைச்செல்வன் மன்னார்குடி, 1,2 பிரதிவாதிகள் செம்பியவரம்பல் கிராமத்தை சேர்ந்தவர்கள். ஜாதக பரிவர்த்தனை ஏற்பட்டது. 30.10.2022ல் என் வீட்டிலிருந்து பெண் பார்க்க போனார்கள். அதிலிருந்து 2,3 நாட்கள் கழித்து ஜாதகம் அனுப்பினார்கள். பொருத்தம் பார்த்ததில் சரியாக இருந்தது. நான் நேரில் 15.02.2023ல் போய் பெண் பார்த்தேன். நான் அமெரிக்காவில் இருக்கும் போதே பெண் பார்த்த விசயம் பேசி நானும் 2ம் பிரதிவாதியும் போனில் வீடியோ கால் மூலமாக பேசிக்கொண்டோம். 05.11.2022 முதல் அவ்வாறு பேச ஆரம்பித்தோம். நான் சொல்வது போல் 30.10.2022 ல் என் பெற்றோர் பிரதிவாதிகள் வீட்டிற்கு பெண் பார்க்க போகவில்லை என்றால் சரியல்ல. 30.10.2022ற்கு முன்பே நான் அமெரிக்காவில் இருக்கும் போதே முதல் பிரதிவாதியுடன் பேசி இருக்கிறேன் என்றால் சரியல்ல. 30.10.2022ற்கு முன்னரே நானும், 2ம் பிரதிவாதியும் பேசி ஒருவருக்கு ஒருவர் பிடித்து போனதால் என் அப்பா

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

முதல் பிரதிவாதியிடம் போய் திருமணம் பேசினார் என்றால் சரியல்ல. அவ்வாறு 02.11.2022ம் தேதியில் திருமணம் பேசி முடித்து ரொக்கமாக சீர்வரிசை சாமான்கள் மற்றும் நகைகள் வாங்க என் அப்பாவிடம் முதல் பிரதிவாதி ரூ.40,00,000 கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வெளிநாட்டில் இருந்து நகைகள் எடுத்து வரலாம் என்று நான் சொன்னதன் பேரில் 05.11.2022ம் தேதியில் ரூ.25,00,000 1ம் பிரதிவாதி 2ம் வாதியிடம் கொடுத்துள்ளார் என்றால் பொய். திருமணம் நிச்சயதார்த்தம் மற்றும் திருமணம பத்திரிக்கை அடிப்பது சம்மந்தமாக முதல் பிரதிவாதி என் தந்தையிடம் பேச வந்த போது தான் வார்த்தை வித்தியாசமாக பேசி முதல் பிரதிவாதிக்கு கவலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வார்த்தைகள் வித்தியாசமாக இருந்ததால் என் அப்பாவே பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறோம் ரசீது கொடுங்கள் என்று 01.12.2022 தேதியில் சொன்னார் என்றால் பொய். 1ம் பிரதிவாதி யோசித்து சொல்கிறேன் என்று சொன்ன நிலையில் 06.12.2022ம் தேதி என் அப்பா 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு ரூ.10,00,000 பணமாக அனுப்பி விட்டார் என்றால் இதற்காக அனுப்பவில்லை ஆனால் பணம் அனுப்பினார். மீண்டும் 2ம் பிரதிவாதி பணம் அனுப்ப வேண்டாம் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று சொன்ன நிலையில் மீண்டும் 06.12.2022ம் தேதி 2ம் பிரதிவாதி வங்கி கணக்கிற்கு ரூ.10,00,000 பணம் அனுப்பியுள்ளார் என்றால் இந்த காரணம் தவறு. முதல் பிரதிவாதி தமிழரசி தன் கணவர் செல்வராஜ் என்பவருக்கு பித்தப்பையில் கேன்சர் இருந்ததால் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் வைத்து சிகிச்சை செய்தார். கொரோனா காலம் என்பதால் பணம் பிரட்ட முடியவில்லை என்றும், நிலத்தை அடமானம் வைத்து கந்து வட்டிக்கு பணம் வாங்கி செலவு செய்து வருவதாகவும் நாங்கள் கடன் கொடுத்து உதவினால் அந்த நிலத்தை செம்பியவரம்பலில் ஐயர் என்பவருக்கு விற்று பணத்தை திரும்ப தருவதாக முதல் பிரதிவாதி சொல்லி ரூ.500 பத்திரத்தில் எழுதி கொடுத்து இந்த பணத்தை வாங்கியுள்ளார். செம்பியவரம்பல் ஐயர் என்பவருக்கு விற்று பணத்தை தருவதாக முதல் பிரதிவாதி சொன்னதாக நான் வழக்குரையிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லவில்லை என்றால் ஆமாம் ஆனால் அவர் அவ்வாறு சொல்லி தான் பணம் வாங்கினார். என் அப்பா திருநாவுக்கரசு

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

பெயரில் தமிழரசி எழுதிக்கொடுத்தார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் ரூ.20,00,000 கடனாக வாங்கி கொள்வதாகவும், அதை செலுத்த முடியாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் நானும், என் குடும்பத்தை சேர்ந்தவர்களும் விவரம் சொன்னோம். இந்த 500 ரூபாய் பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதன் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 500 ரூபாய் பத்திரத்தில் முதல் பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன். 28.12.2022ல் வா.சா.ஆ.13 சான்று ஆவணத்தை தான் நான் முதல் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் என்று சொல்கிறேன். 06.12.2022ல் கொடுத்த பணத்திற்கு நேரில் வந்து எழுதிக்கொடுக்க முடியவில்லை என்று ஸ்பிடு போஸ்ட் மூலமாக இந்த கடிதத்தை முதல் பிரதிவாதி அனுப்பினார். நான் குறியீடு செய்த ஆவணங்களில் மேற்படி 28.12.2022 ஆவணம் இல்லை என்றால் சரி. இந்த ஆவணத்தின் அசல் முதல் பிரதிவாதி வசம் நிச்சயதார்த்த ரத்து பத்திரம் எழுதிக்கொடுத்த போது திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த ஆவணம் திருப்பி கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை என் முதல் விசாரணையிலும், வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரி ஏனெனில் இந்த தொகையும் சேர்த்து தான் மொத்த தொகையாக பிரதிவாதிகள் வாங்கிய தொகைக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். 06.12.2022 தேதியிலிருந்து 4 வாதிகள் பெயரிலும் தனித்தனியாக அனுப்பப்பட்ட பணம் அனைத்தும் பிரதிவாதிகள் ஏற்கனவே கொடுத்த ரொக்க தொகையைத்தான் திருப்பி செலுத்தியுள்ளோம் என்றால் அது பொய். எனக்கு நிச்சயதார்த்தம் 24.02.2023ல் நடந்தது. நான் அமெரிக்காவில் இருந்து திரும்பி 10.02.2023 ல் வந்த பிறகு தான் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் ஆமாம். நானும், 2ம் பிரதிவாதியும் பேசினோம் என்றாலும், என் குடும்பத்தார் வேண்டாம் என்று சொல்லியும் நான் வற்புறுத்தியதால் தான் நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரியல்ல. இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டு நார்மலாகத்தான் நிச்சயதார்த்தம் நடந்தது. அமெரிக்காவில் இருந்து வந்த பின்னர் நிச்சயதார்த்ததிற்கு பிறகும் நானும் 2ம் பிரதிவாதியும் பல்வேறு இடங்களுக்கு சென்று செல்பி ,

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

வீடியோ எடுத்திருக்கிறோம் என்றாலும், பொது இடங்கள் மற்றும் வெளியூருக்கு பல முறை சேர்ந்து சென்றிருக்கிறோம் என்றால் சரியல்ல. ஒருமுறை குடும்பத்துடன் புடவை எடுக்க போனோம். மற்றொரு முறை தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு என் அம்மா மற்றும் அந்த பெண்ணுடன் போனோம். நானும், 2பிரதிவாதியும் மட்டும் தனியாக போய் செல்பி, வீடியோ ஆகியவை எடுத்திருக்கிறோம் என்றால் அது பொய். திருமணம் 13.03.2023 அன்று நாச்சியார்கோவில் பாப்பாத்தி திருமண மண்டபத்தில் வைப்பதாக பேசி முடிக்கப்பட்டது. ஏற்கனவே கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்த பிறகு பணமோ, நகையோ் வேண்டாம் அந்த பெண் தான் வேண்டும் என்று நான் விரும்பியதால் தான் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் தவறு. எங்களிடம் பெண் வீட்டு தரப்பில் பணம் எதுவும் கொடுக்கவில்லை. எங்களிடம் இருந்து தான் அவர்கள் பணம் கடனாக வாங்கியுள்ளார்கள். திருமண நிச்சயதார்த்தத்தின் போது இருதரப்பினரும் நகைகள் அணிவிக்கப்படவில்லை என்றால் தவறு. பெண் வீட்டார் எனக்கு கையில் காப்பு அணிவித்தார்கள். எங்கள் தரப்பில் பெண்ணுக்கு 5 பவுன் செயின் மற்றும் 4 பவுன் வளையல் போட்டோம். நிச்சயதார்த்தம் நடந்த அன்றே லக்ன பத்திரிக்கை எழுதப்பட்டது. 24.02.2023 அன்று நிச்சயதார்த்தம் நடைபெற்று திருமணம் 13.03.2023 அன்று என்று நிர்ணயிக்கப்பட்ட நிலையில் திருமண புடவை எடுக்க இருதரப்பிலும் 26.02.2023 அன்று குடும்பத்துடன் திருபுவனம் போய் புடவை எடுத்தோம். 26.02.2023 அன்று திருமண புடவை எடுத்தது சம்மந்தமாக நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. எதன் காரணமாக எனது திருமணம் நின்றது என்றால் திருபுவனத்தில் பெண்ணிற்கு புடவை எடுத்து விட்டு எனக்கு சென்னை சில்க்ஸ் வந்து டிரஸ் எடுத்தோம். அப்போது 2ம் பிரதிவாதி திருமண பெண்ணிற்கு நிறைய போன் கால் வந்தது அதை அவர் தவிர்த்து வந்தார். அதை என்ன காரணம் என்று கேட்ட போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். அதன் பிறகு அவரை மீண்டும் கேட்ட போது ராஜா என்பவர் 2ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இருந்ததாகவும், 2ம் பிரதிவாதி சம்மதித்து இருந்ததாகவும், ராஜா என்பவருக்கு திருமணம் ஆகி 3 குழந்தைகள் இருப்பதாக சொன்னார்.

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

அதன் பிறகு 2ம் பிரதிவாதி அனுமதியுடன் அவருடைய மொபைலை பரிசோதனை செய்த போது மிகவும் மோசமான புகைப்படங்கள் இருந்தது. இந்த விவரங்கள் என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்படவில்லை என்றால் ஆமாம். ஒரு பெண்ணின் தனிப்பட்ட விவரங்களை சொல்ல வேண்டாம் என்பதால் மறைமுகமாக சொல்லியுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் கேட்பதால் விவரங்கள் சொல்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 12ல் 2ம் பிரதிவாதியை குறித்து பெண் என்பதால் தவறாக சொல்லக்கூடாது என்று தெரிவித்துக்கொண்டு நல்ல ஒழுக்கமான பெண் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் 2ம் பிரதிவாதியை தவறாக சொல்கிறேன் என்றாலும், அவர் அவ்வாறான பெண் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியுடன் பெரிய கோவில் போனது பற்றி நான் என் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரி. தமிழ் பல்கலைக்கழக காவல் நிலையத்தில் எந்த தேதியில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை. 1,2 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தேன். அந்த புகாரின் நகலை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.18 புகாரைத்தான் சொல்கிறேனா என்றால் ஆமாம். இதை நான் SP அலுவலகத்தில் கொடுத்தேன். அதை அவர்கள் தமிழ் பல்கலைக்கழக காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். காவல் நிலைய அதிகாரிகள் விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில்லை. 18.03.2023ம் தேதி ஏற்பட்ட திருமண ரத்து பத்திரத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளின் கையெழுதது இல்லை என்றால் பொய் என் முன்னிலையில் தான் அவர்கள் கையெழுத்து போட்டார்கள். வா.சா.ஆ.20 திருமண நிச்சயதார்த்த ரத்து பத்திரம் ஏற்படவில்லை என்றாலும், எனக்கு வேண்டியவர்களின் உதவி கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20ல் 28.12.2022ம் தேதி ரூ.500 பத்திரத்தில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணம் பற்றி இதில் சொல்லப்படவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.18 SP ஆபிசில் கொடுத்த புகார் பற்றி என்னுடைய வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். என்னுடைய சகோதரிகள் பெயர் ஜெயந்தி,

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

லெட்சுமி, சரஸ்வதி. 13.09.2023ம் தேதி முதல் பிரதிவாதி காசோலை மூலமாக என் சகோதரி ஜெயந்திக்கு ரூ.3,00,000 கொடுத்தார். திருமணத்திற்காக 2ம் பிரதிவாதிக்கு ஜெயந்தி ரொக்கமாக கொடுத்த தொகையைத்தான் 1ம் பிரதிவாதி காசோலையாக திருப்பி கொடுத்துள்ளார் என்றால் பொய். வழக்குரையுடன் வா.சா.ஆ.23ஆக நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் ஆமாம். அதில் தொகை 60,08,000 என்று உள்ளது என்றால் ஆமாம். SPக்கு புகார் தயார் செய்து கொடுத்தது என் வக்கீல். அதற்கு சங்கதி சொன்னது நானும், என் குடும்பத்தாரும். அந்த புகாரில் திருமண புரோக்கர் கலைச்செல்வன் மூலமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த தேதியில் அவர் மூலமாக தொடர்பு ஏற்பட்டது என்று சரியாக நினைவில்லை. கடந்த அக்டோபர் 2022 என்று தான் போடப்பட்டுள்ளடு என்றால் ஆமாம். 30.10.2022ல் என் பெற்றோர் சகோதரியுடன் போய் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரி. அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு 19.02.2023 அன்று தான் நான் விரும்பி அந்த பொண்ணு தான் வேண்டும் என்று கேட்டதன் பேரில் போய் பார்த்தேன் என்றால் சரியல்ல. 19.02.2023 அன்று போய் பேசி முடித்து பூ வைத்தோம். நான் சொல்வது போன்று மருத்துவ சிகிச்சைக்காகவும் கடனுக்காகவும் எங்களிடம் தொகை எதுவும் 1,2 பிரதிவாதிகள் கடனாக பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18ல் வீடு கட்டும் செலவு மற்றும் இதர செலவிற்காகவும் நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அவ்வாறான சங்கதியை இந்த வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரி. 2ம் பிரதிவாதி பற்றி தவறாக சொல்லி அவதூறு பரப்பும் வகையில் நான் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொள்வதாக கூறி நம்பிக்கை துரோகம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் கொடுத்த தொகையைத்தான் நாங்கள் திருப்பி கொடுத்திருக்கிறோம் என்றாலும், அதனால் 1,2 பிரதிவாதிகள் எந்த தொகையும் கொடுக்க கடமை பட்டடவர்கள் அல்ல என்றால் சரியல்ல. காவல் துறை விசாரணையில் நீங்கள் சிவிலில் போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றால் பொய். நான் திருமணம் செய்யாமல் 2ம் பிரதிவாதியை நம்பிக்கை துரோகம் செய்ததால் அவர் எங்கள் மீது

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

நடவடிக்கை எடுத்து விடுவார் என்பதற்காக இவ்வாறாக பிரதிவாதிகள் மீது நாங்கள் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 2 பிரதிவாதிக்கும் நான் சொல்லும் ராஜாவிற்கும் எந்த வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் உள்நோக்கத்தோடு செயல்படுவதால் தான் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மீது தவறாக சொல்ல மாட்டேன் என்று சொல்லிவிட்டு காவல் துறையிலும், வழக்குரையிலும் அவர் மீது அவதூறாக சொல்லி உள்ளேன் எனறால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 4.48**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.